Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC. NO. 168/2010
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 09 Page.No. 74/23

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ஜெயலட்சுமி | | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. சங்கர் | தொழில் | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 17 th day of February 2026.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-** (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)

1. நான் தற்போது திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த சமயம் கடந்த 25.03.2010 அன்று உதவி ஆய்வாளர் திரு. கணேசன் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது திருப்பத்தூரை சேர்ந்த குடியன் மகன் லிங்கேசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 401/2010 இதச பிரிவு 379 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். (**அந்த முதல் தகவல் அறிக்கை என்னால் அ.சா.ஆ.06 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். வாழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்ட காவல் ஆய்வாளர் திரு. நாகராஜன் சம்பவ இடம் சென்று சாட்சிகள் லோகேசன் மற்றும் மலைகேசவன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார். (**அந்த மாதிரி வரைபடம் என்னால் அ.சா.ஆ.07 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**) பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

2. பின்னர் இவ்வழக்கு சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். கடந்த 16.04.2010 அன்று நாட்றம்பள்ளி காவல் நிலைய காவல் ஆய்வாளர்

திரு. சீனிவாசன் என்பவர் கொத்தூர் சோதனை சாவடியில் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது இருசக்கர வாகனத்தில் வந்த இவ்வழக்கு எதிரிகளை விசாரித்த போது அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் அவர்களை காவல் ஆய்வாளர் விசாரித்தார். அப்போது அவர்கள் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதாகவும், திருப்பத்தூர் காவல் நிலைய குற்ற எண். 401/2010 என்ற வழக்கிலும் ஈடுபட்டதாக கூறி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர். அதனை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தார். பின்னர் இந்த விவரத்தை நாற்றம்பள்ளி காவல் ஆய்வாளர் திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளருக்கு தெரிவித்ததன் பேரில் எதிரியை சம்பிராத கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி அவர்களை போலீஸ் காவலில் எடுத்து சாட்சிகள் முன்னிலையில் விசாரித்த போது அவர்கள் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக கூறி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனர். மேலும் 2ம் எதிரியிடம் இருந்து பணம் ரூ.26,000 கைப்பற்றப்பட்டு படிவம் -95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது. மேலும் தனது விசாரணையில் எதிரிகள் இதச பிரிவு 420 கீழும் குற்றசம்பவத்தில் ஈடுபட்டுள்ள விவரம் தெரியவந்தததால், 379, 420 கீழ் பிரிவு மாற்றல் செய்யப்பட்டது. பின்னர் தனது விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 379, 420 கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

• ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும், பொருட்கள் ஏதும் கைப்பற்றவில்லை என்றாலும் இவ்வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து புள்ளிவிவரத்திற்காக மட்டுமே எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH

Witness sign

Judicial Magistrate No. 1
Tirupattur.